# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 11143/SCIC/2023

திரு.தனக்கோடி த/பெ.கந்தசாமிக் கவுண்டர்
எண். 65, ஓம் காளியம்மன் கோயில் வீதி ...... மேல்முறையீட்டாளர்
ஆ.புதுப்பாளையம், சக்தி நகர் அஞ்சல்
பவானி, ஈரோடு - 638 315.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
கவுந்தப்பாடி, ஈரோடு மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 03.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 03.04.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 03.05.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 12.05.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 21.06.2023 |
| 6. | ஆணையத்தின் அறிவிப்பு | 24.11.2023 |
| 7. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.09.2024 |
| 8. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 09.10.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர் அலுவலகம், கவுந்தப்பாடி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பொருள் - கவுந்தப்பாடி சார்பதிவாளர் அலுவலகம், தடங்கல் மனு 27/2022, நாள் 03/10/2022 இதை பொருட்படுத்தாமல் 25/01/2023 அன்று ஆவண எண்கள் 245/2023, 246/2023, 247/2023 மற்றும் 248/2023 ஆகிய நான்கு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது பற்றி தகவல் வேண்டி - தொடர்பாக - பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.39708/C1/2018 நாள் 04/10/2018 பார்வை 2-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி எனது தடை மனு மீது விசாரணை மேற்கொள்ளப்படாமலும் அதன் முடிவினை வெளியிடாமலும் கடந்த 25/01/2023 அன்று தடை மனுவை பொருட்படுத்தாமல் ஆவண எண்கள் 245/2023, 246/2023, 247/2023 மற்றும் 248/2023 ஆகிய நான்கு கிரைய ஆவணங்கள் உங்கள் அலுவலகத்தின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் எதன் அடிப்படையில் இந்த ஆவணப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை தகவலாக கொடுக்க வேண்டுகிறேன்." என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 09/06/2025 அன்று அனுப்பிய ஆணையத்திற்கு அனுப்பிய மின்னஞ்சலில் தனக்கு காணொளி காட்சி வாயிலான விசாரணை வேண்டுமென கோரியுள்ளார். மனுதாரரிடம் கைப்பேசி வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.மா.கலைவாணி, சார்பதிவாளர், கவுந்தப்பாடி சார்பதிவகம் அவர்கள் ஆஜரானார். மனுதாரருக்கு, 14/06/2023 தேதியிட்டு, தகவல் அளித்துள்ளதாகத் தெரிவித்தார். இதுகுறித்து மனுதாரரிடம் கேட்டதற்கு, அத்தகவலில் தான் மனநிறைவு அடையவில்லை என்று தெரிவித்தார்.**

**3. எனவே, மனுதாரர், மேற்குறிப்பிட்ட 14/06/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், அனுப்பிய தகவலில் எந்தெந்த இனங்களுக்கான தகவல் சரியானதாக இல்லை என்று குறிப்பிட்டு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தனது ஆட்சேபணையினை பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், கவுந்தப்பாடி சார்பதிவகம் அவர்களுக்கு அனுப்புவதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்டவாறு, மனுதாரரிடமிருந்து, ஆட்சேபணை மனு கிடைக்கப் பெற்றவுடன், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு, ஆட்சேபணை மனுவின் அடிப்படையில், ஆவணங்களின்படியான சரியான / திருத்திய தகவலினை 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினையும், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலினையும் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ:ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11143/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
கவுந்தப்பாடி, ஈரோடு மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.தனக்கோடி த/பெ.கந்தசாமிக் கவுண்டர்
எண். 65, ஓம் காளியம்மன் கோயில் வீதி
ஆ.புதுப்பாளையம், சக்தி நகர் அஞ்சல்
பவானி, ஈரோடு - 638 315.

RG/PC